# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1989 ★ இதழ் — 159




# நெல்லிக்காய் விலையேறுகிறது!

சங்ககாலம் முதல் இன்றுவரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பெருமை பெற்றுவரும் நெல்லிக்காய் இன்று நல்ல விலை பெறுகிறது.

புல்லிலைநெல்லிப் புகரில் பசுங்காய் என்றும், வீழ்கடைத் திரள்காய் என்றும், குவிகண் பசுங்காய் என்றும், அம்புளித் திரள்காய் என்றும், தீஞ்சுவைத் திரள்காய் என்றும், பழந்தமிழ்ப் புலவர்கள் போற்றியுண்டு நீண்டகாலம் வாழ்ந்தமை நெல்லிக் காயின் சுவை கண்டமையால் என்பர்.

நெல்லிக்குத்தான் எத்தனை பெயர்கள் இட்டுச் சுவைத்தார்கள். ஆமலகம், ஆலகம், ஆம்பல், ஆமரிகம், தாத்தாரி தாத்திரி, கோரங்கம், மிறுதுபலா, மீதுந்து என்பன ஒருசில. பிலந்துஸ் எம்பி லிக்கா என்பதும் இதுவேதான். இன்னும் உசிரிகா, நெல்லிக்கா, நெல்லிக்கை, அமலகி, அம்லிகா, அம்லட்ஜ், அமிலா என்று வேறு பல மொழிகளிலும் இது வழங்குகிறது.

நெல்லிக்காயை வாயிலிட்டபின் பல்வேறு சுவைகளை அறியலாம். புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு. நெல்லியின் இலை முதல் வேர்வரை குணம் தரும் பகுதிகளாம். நெல்லிக்காய் தின்றபின் நீர் பருகிய புலவர் தாம் சுவைத்த சுவையை அகநானூற்றுப் பாடலில் அருமையாகப் பாடுகிறார்.

“புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின்” என்பர்.

இனி நெல்லிக்கனியை எத்தனையோ விதமாக நம்மவர்கள் பக்குவப்படுத்திப் பாதுகாத்துவைத்து உண்டனர். அம்முறைகள் யாவும் எல்லோரும் அறிந்தவையேயாம்.

★ பணிகளில் பெரியது கல்விப் பணி ★

சிவமயம்



## சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

### திருவெஞ்சமாகக்கூடல்

பண் — கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தொழுவார்க்கெளி யாய்துயர் தீரநின்றாய்
சுரும்பார்மலர்க் கொன்றைதுன் றுஞ்
சடையாய்
உழுவார்க்கரி யவ்விடை யேறியொன் னார்
புரந்தீயெழ ஓடுவித் தாய்அழகார்
முழவாரொலி பாடலொ டாடலரு
முதுகாடரங் காநட மாடவல்லாய்
விழவார்மறு கில்வெஞ்ச மாக்கூடல்
விகிர்தாஅடி யேனையும் வேண்டுதியே.

திருச்சிற்றம்பலம்

தேவரீரைத் தொழுபவருக்கு எளிதில் கிடைக்கும் தனமாயுள்ளவரே, துன்பந்தீர என்றுந் துணையானவரே, வண்டுகள் ஒலிக்கும் கொன்றை மலர்மாலை யுடையவரே, உழுவார்க்குதவா விடையேறுபவரே, பகைவர் புரங்களில் தீயை ஏவியருளியவரே, பேய்களின் ஓசையாகிய மத்தள ஒலியும் பாட்டும் குதிப்பும் நீங்காப்புறங்காடே அரங்காக நடனமாட வல்லவரே, விழாக்கள் நிரம்பிய திருவெஞ்ச மாக் கூடலில் எழுந்தருளியிருக்கின்ற வேறுபட்ட இயல்பை உடையவரே, அடியேனையும் தேவரீரின் அடியாருள் ஒருவனாக வைத்து விரும்பி அருள் செய்வீராக.



பெண்வழிச் சேறல்


( தன்வழி ஒழுக வேண்டியவளாய பெண்வழியில் தான் ஒழுகுதல் )

" அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல் "

மனையாள் ஏவலின் படியே நடப்பவரிடத்திலே நல்லறச் செய்கையும், நற்பொருளீட்டற்குரிய நயமான செய்கைகளும் இல்லையாம்.

**Becoming a siave of his wife**

To them that slave for wifes there are neither virtuous deeds, nor wealth nor actions leading to happiness.



## 1989 பங்குனி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | புதன் | ... | அட்டமி - நவமி |
| 2. | வியாழன் | ... | நவமி பகல் 9 - 46 வரை |
| 4. | சனி | ... | ஏகாதசி விரதம் |
| | | | வண்ணை சிவன் கொடியேற்றம் |
| 5. | ஞாயிறு | ... | பிரதோஷ விரதம் |
| 6. | திங்கள் | ... | மகாசிவராத்திரி விரதம் |
| | | | கீரிமலை நகுலேசுவரர் தேர் |
| 7. | செவ்வாய் | ... | அமாவாசை |
| 12. | ஞாயிறு | ... | கார்த்திகை விரதம் |
| 13. | திங்கள் | ... | நல்லூர் சட்டைநாதர் கொடி |
| | | | கொழும்பு பொன்னம்பல |
| | | | வாணேசர் கொடி |
| 14. | செவ்வாய் | ... | பகல் 10 - 18 அட்டமி |
| | | | தமிழ்ப்பங்குனி |
| | | | சைவப்பெரியார் சிவபாதசுந் |
| | | | தரனார் நினைவு |
| 15. | புதன் | ... | அட்டமி - நவமி |
| 16. | வியாழன் | ... | நவமி பகல் 8 - 49 வரை |
| 18. | சனி | ... | சிவயோகசுவாமிகள் குருபூசை |
| 19. | ஞாயிறு | ... | பிரதோஷவிரதம் |
| 21. | செவ்வாய் | ... | பூரணைவிரதம் |
| 29. | புதன் | ... | மருதடி கொடி |
| | | | இரவு 11 - 43 அட்டமி |
| 30. | வியாழன் | ... | அட்டமி / நவமி |
| 31. | வெள்ளி | ... | நவமி இரவு 9 - 57 வரை |

★ சரியான விழிப்புணர்ச்சி அவசியம் தேவை ★




## கொம்பனிகள்

ஆங்கிலேயர் இலங்கையை ஆளத்தொடங்கிய காலத்திலே கொம்பனி ஆட்சி தொடங்கியது. கிழக்கிந்திய வர்த்தகக் கொம்பனி, பிரபலமுற்று நாடு பிடிக்கும் வேட்டையிலும் வெற்றி கண்டதுண்டு. கொம்பனி ஆட்சிக்காலத்தில் சென்னையிலிருந்து மெட்ருஸ் கிளாக்குமார் நூற்றுக்கணக்கில் கொழும்பில் குடியேறி ஆட்சி நடத்த உதவியாயிருந்தனர்.

ஆங்கிலேயர் வியாபாரத்தில் திறமையுற்றிருந்ததால் A Nation of shop keepers என பரிகாசமாகவும் பழிக்கப்பட்டனர். கொழும்பில் ஆங்கிலேயர் ஆரம்பித்த கொம்பனிகளில் தரகர்களாயும், காசாளர்களாயும் பங்கு வியாபாரிகளாயும் இருந்து செல்வாக்குற்றவர்கள் யாழ்ப்பாணத் தமிழர். அவர்களுள்ளும் மானிப்பாய் நகரத்தார் பெருந் தொகையினராயிருந்தனர். கொழும்பில் வாக்கர் மில்லர், காகில்ஸ், ஹன்ரர், வைற்றவேலெயிட்லோ, பிரவுண் முதலிய கொம்பனிகளில் வேலை கிடைத்தவர்கள் கவுண்மேந்து உத்தியோகத்தர்போல் பீடுநடை போட்டகாலம் ஒன்று. கொம்பனிகளை யாழ்ப்பாணத்தார் வளர்க்கக் கொம்பனிகள் யாழ்ப்பாணத்தை வளர்த்தன. அக்காலத்தில் இங்கிலாந்தில் கறிச்சரக்கு, புடைவை, தங்கம், மீன், தளபாடம் சம்பந்தமாகப் பாரிய கொம்பனிகள் நடைபெற்றன. அவற்றை ஆங்கிலத்தில் "Great London Companies" எனவழங்கினர்.




## இலங்கையில் மீன்பிடித் துறைகள்

யாழ்ப்பாணக் கரையூர், கல்பிட்டியா, நீர்கொழும்பு, முகத்துவாரம், காலி, மட்டக்களப்பு, திருகோணமலை.

## இலங்கை வானொலி

பேச்சு, விஞ்ஞானம், கலாசாரம், சட்டம், வைத்தியம், யோகம், பிரயாணம், விவாதம், விசேடதின வைபவம், இசை, நாடகம், கிராமநிகழ்ச்சி, சமய நிகழ்ச்சி, மாதர் நிகழ்ச்சி, சிறுவர் நிகழ்ச்சி, விளம்பரம் அறிவித்தல், செய்தி.

## இலங்கையில் பழைய தேசாதிபதிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பிரடறிக்நோத் | 1798 | — | 1805 |
| 2. | மெயிற்லண் | 1805 | — | 1811 |
| 3. | றேபேட் பிரவுண்றிக்பாட் | 1812 | — | 1820 |
| 4. | எட்வேட் பஜட் | 1822 | — | 1823 |
| 5. | எட்வேட் பாண்ஸ் | 1824 | — | 1831 |
| 6. | றேபேட் வில்மட் | 1831 | — | 1837 |
| 7. | யேம்ஸ் அலக் மக்கன்சி | 1837 | — | 1841 |
| 8. | கொலின் கம்பல் | 1841 | — | 1847 |
| 9. | வைகவுண் ரொறிங்ரன் | 1847 | — | 1850 |
| 10. | விலியம் அண்டசன் | 1850 | — | 1855 |
| 11. | ஜோர்ச் பாட் | 1855 | — | 1860 |
| 12. | சாள்ஸ் மக்காதி | 1860 | — | 1863 |
| 13. | ஹெர்குலிஸ் றொபின்சன் | 1865 | — | 72 |
| 14. | விலியம் கிரகரி | 1872 | — | 77 |
| 15. | றேபேட் லொங்டன் | 1877 | — | 83 |
| 16. | ஆதர் கோடன் | 1883 | — | 90 |
| 17. | ஆதர் ஹவலொக் | 1890 | — | 95 |
| 18. | வெஸ்ற் றிட்ச்வே | 1895 | — | 1902 |
| 19. | ஆதர் பிளாக் | 1903 | — | 1907 |
| 20. | ஹென்றி எட்வேட் மக்கலம் | 1907 | — | 1913 |
| 21. | றேபேட் சாமேஸ் | 1913 | — | 1916 |
| 22. | யோண் அண்டசன் | 1916 | — | 18 |
| 23. | விலியம் ஹென்றி மனிங்ஸ் | 1918 | — | 25 |
| 24. | சாள்ஸ் கிளிபோட் | 1925 | — | 27 |
| 25. | ஹேபேட் ஸ்ரான்லி | 1927 | — | 31 |
| 26. | கிரேம் தொம்சன் | 1931 | — | 33 |
| 27. | எட்வேட் ஸ்ரப்ஸ் | 1933 | — | 37 |
| 28. | அன்று கல்டிகட் | 1937 | — | 44 |
| 29. | மொங்மேசன்மூர் | 1944 | — | 48 |

## இரண்டும் வழக்கில் உள்ளன


| | | | |
|---|---|---|---|
| 1. | தரை | — | தறை |
| 2. | வரட்சி | — | வறட்சி |
| 3. | கரடி | — | கறடி |
| 4. | குரைத்தல் | — | குலைத்தல் |
| 5. | மெல்ல | — | மெள்ள |
| 6. | கவழம் | — | கவளம் |
| 7. | பூனை | — | பூஞை |
| 8. | கதவு | — | கதவம் |
| 9. | கருடன் | — | கலுழன் |
| 10. | கருப்பு | — | கறுப்பு |
| 11. | கருமம் | — | கன்மம் |
| 12 | கவி | — | கவிதை |

★ முயன்றால் முடியாத காரியம் எதுவுமில்லை ★

13. கள்ளன் — கள்வன்
14. கனா — கனவு
15. காக்கை — காகம்
16. காவிரி — காவேரி
17. குச்சு — குச்சி
18. வித்து — விதை
19. விழவு — விழா
20. வேடன் — வேடுவன்

### மரூஉச்சொல்

பெருமகன் — பெருமான்
பெருமாட்டி — பிராட்டி
பொழுது — போது
மணவாட்டி — மணாட்டி
மணவாளன் — மணாளன்
மயல் — மால்
மருமகன் — மருகன்
மிகுதி — மீதி
முகக்கூடு — முக்காடு
மூஞ்சுரு — மூஞ்சூறு
மைத்துனி — மதனி
வரணம் — வருணம்
விகிதம் — வீதம்
விழுது — வீழ்து
வெஞ்சணம் — வெஞ்சனம்



### 1. சிவபரத்துவம் என்பதைச் சுருக்கமாக கூறுக:

நினைத்த மாத்திரத்தே ஆன்மாக்களுக்கு மங்களத்தைச் செய்பவரும் ஆன்மாக்கள் தம்மிடத்தே ஒடுங்குவதற்கு ஒடுங்கியாய், சோதிமயமாய் இருப்பவரும், நித்திய கல்யாண குணங்கள் உள்ளவரும், அழகானவரும் அமைதியாயிருப்பவரும், தமக்கு மேலோர் தலைவனில்லாதவரும், எல்லோருக்கும் தேவனும் குருவுமாய் உள்ளவர் சிவன். மேலான தன்மை பரத்துவம். வேதத்தின் முடிபான சிவ பரத்துவத்தைக் கூறும் சிவாகமங்களை சித்தாந்தம் என்பர்.

### 2. அத்துவா என்பது எவற்றை?

அத்து என்பது மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை, என்பனவற்றையாம். அத்துவா என்றால் வழி என்பது பொருள். இவற்றுள் மந்திரங்கள் பதினொன்று பதம் எண்பத்தொன்று, வன்னம், ஐம்பத்தொன்று, புவனம் இருநூற்று இருபத்து நான்கு, தத்துவம் முப்பத்தாறு, கலைகள் ஐந்து. இவை ஆன்மாக்களுக்குக் கன்மம் ஏறுவதற்கும், கன்மம் நீக்கச் சிவன் திருவடியடைவதற்கும் வழியாயிருக்கும்.

### 3. பிரபஞ்சங்கள் என்பன யாவை?

பிரபஞ்சங்கள் சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என இரண்டாம். மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், சொற்பிரபஞ்சம் எனப்படும். புவனங்கள் தத்துவங்கள் கலைகள் பொருட்பிரபஞ்சங்கள் எனப்படும்.

### 4. சிவநடனத்துக்குரிய சபைகள் என்னும் அம்பலங்கள் எவை?

திருவாலங்காடு — இரத்தினசபை
சிதம்பரம் — கனகசபை
மதுரை — வெள்ளியம்பலம்
திருநெல்வேலி — தாமிரசபை
திருக்குற்றாலம் — சித்திரசபை

### 5. சிவதத்துவங்கள் என்பன எவை?

சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சக்தி, சிவம்.

### 6 சிவன் வகை என்பவை யாவை?

அதிகாரசிவன், போகசிவன், இலயசிவன்.

### 7. சிவசின்னங்கள் என்பன யாவை?

திருநீறு, உருத்திராக்கம்

## சவுக்கு வளம் பெருக

தமிழ் நாட்டில் சென்னையிலிருந்து கோயம் புத்தூர் போகும் வழியில் காணக்கூடிய அற்புதக் காட்சிகளுள் பெரியகுளங்கள் ஒருபுறம். மறுபுறமாயமைந்த வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் துலா மூலமும் இயந்திரம் மூலமும் நீர்பாய்ச்சும் காட்சி அற்புதமானவை. அப்பால் இரு மருங்கினும் திட்டமிட்டு வரிசையாய் நடப்பெற்ற சவுக்குமரம் அழகாக அடர்த்தியாக வளர்ந்து பசுமையாக உள்ளன.

சவுக்குமரம் வளரும் போதே பயன்தருவது. சிறிய கம்புகள் முதல் பெரியகம்புகள் வரை நேராக வளர்ந்து வந்தவை மேசன் வேலைகளில் முட்டுக் கொடுக்க உதவுகின்றன. கோணலாக வளர்ந்து வந்தவை கொத்து விறகாகி உடன் விற்பனையாகின்றன.

நாங்கள் எங்கள் பிரதேசமெங்கும் விறகுப் பஞ்சம் போக்க விரும்பிய இடங்களில் நிரையாக நாட்டி விரைவிற் பயன் காண்போமாக. உங்களுக்கு வேண்டிய சவுக்கங் கன்றுகளுக்கு மில்க்வைற் தொழிலதிபரிடம் விண்ணப்பித்துக் கொள்ளுங்கள். இதுவரை மில்க்வைற் உபகரிப்பில் பல்லாயிரம் கன்றுகள் பிரதேசமெங்கும் நடப்பெற்றுள்ளன.

★ பொறுமையும் ஐயமும் முன்னேற்றத்திற்குத் தடை ★



## உள்வீட்டுத் திருமணம்

தை பிறந்ததும் வழிபிறந்த இடத்தில் நடைபெற்ற திருமணங்களுள் உள்வீட்டுத் திருமணமும் ஒன்று. மில்க்வைற் சகோதரருள் ஒருவரான வவநாதன் கந்தளாய்ச் சீனிக் கூட்டுத்தாபனத்தில் பெரியவர். அவர் மகள் செல்வி மதிவதனி வேலணை கிழக்கு சதாசிவம் மனோன்மணி தம்பதிகளின் புதல்வன் பாலசண்முக ரத்தினம் அவர்களைத் திருமணம் செய்துள்ளார். வாழ்க மணமக்கள்.

## செம்பாட்டுப் பூமியில் பண்பாட்டுத் திருமணம்

மில்க்வைற் ஊழியர் தான் ஏழாலை மேற்கு இராமலிங்கம் குணசிங்கம், அவளும்தான் ஊரெழு மேற்கு கமலகுமாரி மூத்துக்குமாரசாமி. உறவினர் ஊரவர் மகிழ ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது திருமணத் தம்பதிகள் எல்லா நலன்களும் பெற்று வாழ்க.

## முதுமாணி வாழ்க!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளர் கலகலப்பான கனகசபாபதி நாகேஸ்வரன் இன்று முதுமாணி. இவர் இனி கலாநிதியாவார். இவரைப் பாராட்டிய மகாஜனக் கல்லூரிப் பழைய மாணக்கர்கள் நாள் முழுதாகப் பெருவிழா எடுத்தார்கள். வாழ்த்தினர்கள். நாமும் வாழ்த்துகிறோம்.

## கன்றும் கனியுதவும்

மட்டுவில் கணபதிப்பிள்ளை வேற்பிள்ளை சைவத் தமிழ் வளர்த்த சான்றோன். அவர் மைந்தர் ஐவருள் நடுப்பிறந்த அர்ச்சுனன் போன்றவர் மகாலிங்கசிவம். குருகவி எனப் பிஞ்சிலேயே முதுகவி பாடிய இயற்கைப் புலவன். மகாலிங்கசிவம் தந்த பார்வதிநாதசிவம் தொட்டதெற்கெல்லாம் பாட்டுப் பாடுபவர். அண்ணாமலையிற் பயிற்றப்பட்டுக் கவியரங்கேறிய புலவர். இவர் காலம்தோறும் உதவும் கவிகள் சிப்புப் சிப்பாய் இனிக்கும் பழங்கள். இதுவரை நாங்கள் சுவைத்த சிப்புக்கள் பல இன்று தானே பழுத்த சிப்பு இன்னும் ஒரு திங்கள். இது குறுங்காவிய வரிசையைச் சேர்ந்தது. அவனும் அவளும் நல்ல சோடியாம். அன்பு கனிந்த சோடியாம். "மான்களின் சோடிபோல, மணிப்புருச் சோடிபோல, தேன் குரற்கிள்ளை தம்முட் சேர்ந்திடும் சோடிபோல, வான் வரை விரையும் சிட்டுக்குருவியின் சோடிபோல" என்று பாடுகிறார். இவரை நாம் பாரதிதாசன் வழி பாடுகிறார் என்று சொல்லலாமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது

## அங்கும் இங்கும்

1. தமிழ்நாட்டில் எல்லாம் தமிழ். பேராசிரியர்கள் பலர் தமிழிலேயே பேசுகிறார்கள். ஈழத்துத்தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அங்கே இடையில் இங்கிலிசு பேசவே தமிழ்நாட்டுப் பேராசிரியர் பேச்சை முடித்து முகத்தைத் திருப்பிக்கொண்டாராம்.
2. தமிழ்நாட்டில் சிறுகதை எழுத்தாளர் பலர் அண்மையில் ஒரு போட்டிக்கு 9496 கதைகளை அனுப்பியிருந்தார்களாம்.
3. ஆங்கிலத்தில் அரிச்சுவடியில் A முதல் Z வரை 26 எழுத்துக்களாம். அவையாவும் உள்ள ஒரு சிறு வாக்கியமாம். "Quick Brown Fox Jumps over the Lazy Dog." இது ஆனந்த விகடனில் வெளிவந்தது.
4. பென்னம் பெரிய நாடான அமெரிக்காவின் பென்னம் பெரிய நகரம் நியூயோக். அங்கே மூன்று தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன. இந்தியாவின் டெல்கியில் பத்துப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. யாழ்ப்பாணத்திலும் ஒரு காலத்தில்— ?
5. புத்தகம் கட்டும் போது சிவப்புத் துணியை உபயோகித்தால் பூச்சியரிக்காது என்கிறார்கள்.

# சொன்னவையும் சொன்னவர்களும்

## சொன்னவை

1. நிர்வாகசபை என்பது தேவையற்றதைச் செய்வதற்கு ஆயத்தமில்லாதவரால் நியமிக்கப்பெற்ற விருப்பமில்லாதவரின் குழுவாகும்.
2. இறந்தகாலத்து நிகழ்ச்சிகளைக் கடவுளே மாற்ற இயலாதவர். ஆனால் வரலாற்றாசிரியர்கள் மாற்றிவிடுவார்கள்.
3. உலகத்தை நேர்மையாக்கிய பின்பே, பிள்ளைகளுக்கு நேர்மை என்பது திறமான கொள்கை என்று போதிக்கவேண்டும்.
4. கண்டு பிடிப்பு என்பது மூளையும் மூலப் பொருளும் சேர்ந்ததாகும் மூளை அதிகமானால் மூலப் பொருள் மிகவும் குறைந்திருக்கலாம்.
5. நாங்கள் விதம் விதமான அரசாங்கப் போக்குகளைக் கையாள்வதில்லை. அரசாங்கப் பிரமாணங்களையே கையாள்கின்றோம்.
6. வசதிகள் அதிகரித்தால் மகிழ்ச்சி உண்டாகும் என்று கருதுதல் ஒரு திரிபுக் காட்சியாகும். எளிமை, சுயாதீனம். ஆயத்தமாயிருத்தலே உண்மையான மகிழ்ச்சி.

## சொன்னவர்

1. பிறெட்அலென்
2. சமுவேல்பட்லர்
3. பேனட்ஷோ
4. சாள்ஸ் கெற்றறிங்
5. வூட்றூவில்சன்
6. ஸ்ரோம். யேம்சன்

★ ஆணும் பெண்ணும் ஐக்கியமாவதே குடும்பம் ★

# ஐரோப்பாவைப் பங்குபிரித்த குடும்பம்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் ஐரோப்பிய அரசுகள் யாவும் நெப்போலியன் காலடியில் கிடந்தன. அவன் அவற்றைச் சகோதரர், சகோதரிகள் நண்பர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்துவிட்டு தான் சக்கரவர்த்தியாயினன். சாதாரண படைவீரன் மனப் பலத்தால் பதவி உயர்ந்தான் என்றுல் அந்தவரலாறு நெப்போலியன் வரலாறு. கட்டையனுன அவனை " விற்றில் கோபோறல் " எனவே அழைத்தனர். படை வீரர்களை அன்பொழுகப் பேசி அழைத்து " வீரர்களே! நாங்கள் பிடிக்கப் போவதெல்லாம் உங்களுக்கே" என்று உற்சாகமூட்டும் போது வீரர்கள் தங்கள் தினவு தீரப் போராடினர்.

கோசிக்கா தீவிற் பிறந்த அவன் பிரான்ஸ், ஸ்பெயின் ஹொலண்ட், நேப்பிள்ஸ், ஜேமனி முதலாய நாடுகளை அடிமைப்படுத்தி இங்கிலாந்து, ரஷ்யா முதலாய நாடுகளை வெகுவாகக் கலக்கினுன். இத்தாலி, அவுஸ்திரியா, பெல்சியம் முதலாய நாடுகளுக்கூடாகப்படைகளை அணி வகுத்துச் சென்ற வீரன் அவன். குதிரையின் முதுகிலே இருந்தவாறு அதன் கழுத்தில் சாய்ந்தவாறு சிலமணி நேரம் களங்களிலேயே நித்திரை தூங்கினுன் என்றுல் அவன் கருமத்திலே கண்ணுயிருந்தான் என்பது புலப் படும்.

பரிசுத்த உரோம இராச்சியத்தைத் தவிடு பொடி யாக்கியதோடு, " அது பரிசுத்தமும் இல்லை, உரோ மானியமும் இல்லை, இராச்சியமும் இல்லை " என்று பகி ரங்கமாக அறிவித்த தோடு, பரிசுத்த போப்பரசரை பிரான்சுக்கு வந்து, தனக்குச் சக்கரவர்த்திக்குரிய முடி யைச் சூட்டுமாறு அழைப்புவிடுத்தான்.

ஐரோப்பாக் கண்டத்தைக் கேக் வெட்டினுற் போலப் பிரித்த அவனுடைய வீரம் என்ன வீரம். காலோ பொன பாட் என்பாரும் லெட்டிசியா றமோலினோ என்பாரும் பெற்ற எட்டுப்பிள்ளைகளில் நெப்போலியன் மொனபாட் இரண்டாம் பிள்ளை. மூத்தவன் யோசேப். மற்றவர்கள் லூசியன், எலிசா, லுயி, போலின், கரோலின், ஜெரேம். நெப்போலியன் 15 - 8 - 1769இல் தோன்றினுன் அவன் 1815ஆம் ஆண்டில் புகழேணியின் உச்சியிலேறிப் பொத் தென்று வீழ்ந்து 1821 இல் இறந்தான். நெப்போலியன் அவுஸ்திரிய இராணியாய மேரிலூயி என்பாளை மணந்து பெற்ற மைந்தனை உரோமாபுரி மன்னன் என வளர்த்த போது அவன் இறந்து போனுன். இவன் காலம் 1811 — 1832, இவனே இரண்டாம் நெப்போலியன் எனவும் வழங்கியவன், நெப்போலியனின் கடைசித்தம்பியார் ஜெரேம் வழியில் மூன்றும் தலைமுறையில் வந்த விக்ரர் நெப்போலியன் காலம் 1863 — 1926.

# ஆடல் பற்றிய ஒரு கதை

தில்லையிலே வாழ்ந்த முனிவர் கூட்டம் தங்கள் தவப் பயனும், தங்கள் மனைவியரின் கற்புக் கனலும் தங்களுக்கு எல்லாம் தரும், தாங்கள் எவரையும் பணிய வேண்டுவ தில்லை என்று தருக்கி இருந்தார்கள். இதை அறிந்த சிவன் தன் பரிவாரங்களிடம் தாம் ஒரு தை மாதத்துச் சிறந்த வேளையிலே அங்கே ஆடல்புரிவதாகவும் அவர் களை அங்குச் சென்று கண்டு மகிழுமாறும் பணித்தார். பத்தர்களும் அங்குச் சென்று காத்திருந்தனர்.

உரியவேளையில் சிவனுர் அங்கே சென்றபோது தருக்கியிருந்த முனிவர்கள் அவரைத்தடுத்தற்காக யாகஞ் செய்து அதிலிருந்து புறப் பட்டுவந்த புலியைச் சிவன் மீது ஏவி விட்டனர். சிவன் தம்மைக் கொல்ல வந்த புலியின் தோலைஉரித்து ஆடையாக்கிக் கொண்டார். முனிவர்கள் தொடர்ந்து செய்த யாகத்தில் வந்த பாம்பை அவர்கள் ஏவியதும் சிவன் அதைவருக என்று வரவேற் றுத் தரித்துக்கொண்டார். முனிவர்கள் மூர்க்கங் கொண்டு மேலும் செய்த யாகத்தில் முயலகன் என்னும் குறள் வடிவு வந்தது. அதை அவர்கள் சிவனிடத்து ஏவியதும் சிவன் முயலகனை மிதித்தவாறு ஆடல்புரிந்த அற்புதத் தைக் கண்டு தருக்குற்ற முனிவர்கள் நல்லவராகிச் சிவனை வீழ்ந்து வணங்கினர்.

# சந்திரன்

உலகமெங்கும் தண்ணென ஒளிபரப்பி இராப் பொழுதில் உதித்து உலாவந்து, தேய்ந்து, வளர்ந்து, மீளத் தேய்ந்து வளர்ந்து தோன்றும் சந்திரனைப் பல விதமாகப் புலவர்கள் பாடியுள்ளார்கள். உலகப் புலவர் களின் உள்ளத்தைத் தொட்ட சந்திரன் எங்கள் புலவர் களையும் திங்கள் என்றும் மதி என்றும் சோமன் என்றும் தொட்ட தோடு, குழந்தைகள் நாவுக்கு அம்புலி என்றும் நிலா வென்றும் பாடிவைத்தார்கள். அல்வாய்ப் புலவர் செல்லையா வட்டத் தோசை சுட்டது போல் வானி லிருக்கும் சந்திரனைக் குழந்தைகளுக்குக் காட்டினுர். அவர் புலமைக்கு வணக்கம். வட்டநிலாவே, அம்புலி அம்புலி வாவா என்றெல்லாம் குழந்தைக் கவிஞர்கள் பலர் பாடியுள்ளார்கள். பாடிக்கொண்டே இருக்கிறுர்கள்

சந்திரனை அழகான பெண் எனக்கண்டவர்கள் கிரேக்கரும் உரோமரும். கிரேக்கர் சந்திரனை அற்றிமிஸ் என்றும், உரோமர் அதனை டயனு எனவும் வழங்கினர் கள். எவர்கள் எங்ஙனம் கூறினுலும் அது ஓர் உபகிரகம் பூமியைச் சுற்றுவது, பூமிக்குரியது. சூரியனிடமிருந்து. ஒளியைக் கிரகித்து வெளிவிருவது. அது இருபத்தேழு நாள்களுக் கொருமுறை பூமியை வலம் வருகிறது. அது 2,38,857மைல் தூரம் சஞ்சரிக்கிறது. அது 2,16,420 மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு அப்பாலும் போனு லும் அது 2,47.667 மைலுக்கு அப்பால் போவதில்லை. பூரண சந்திரனின் குறுக்களவு 2160மைல் என்பர்.

சந்திரன் பூமிக்குத் தன் பின் புறத்தைக் காட்டாம லேயே சுற்றிவருவதால் அதன் மறுபுறம் எப்படியாயி ருக்குமோ அறிய முடியாமல் விஞ்ஞானிகள் ஆவலாயிருந் தார்கள். (தொடர் 7ம் பாக்கம் பார்க்க.)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ரஷ்ய விஞ்ஞானிகள் கருவிகள் கொண்டு சந்திரனின் மறுபக்கத்தைப் படம் பிடித்துள்ளார்கள். மூன்றும் லூனிக் 1959இல் அந்தப் பக்கத்தைப் படம் பிடித்தது.

சந்திரன் எங்கள் பூமியையும் பூமியில் உள்ளவர்களையும் ஒருவகையில் தாக்குகிறது. பூமியைச்சுற்றிவர உள்ள கடல் இராவேளையில் அதுவும் பூரணை நாள்களில் அலை யெறிந்து ஆரவாரிப்பதெல்லாம் சந்திரனின் கவர்ச்சி யாலேயாம். சந்திரன் பூமியில் வாழ்பவர்களின் மனத் திலும் ஒருவிதமாகச் செல்வாக்குக் காட்டுகிறது.

அண்மையில் ரஷ்ய விஞ்ஞானிகள் சந்திரனில் இறங்கி ஆராய்ந்து அங்கிருந்து கல், மண் முதலிய தாதுப் பொருள்களையும் கொண்டுவந்துள்ளார்கள்.

### யானை

இந்தியாவில் காட்டு யானைகளின் தொகை 19,500 அளவிலாகும் என்று கணக்கிட்டுள்ளார்கள். இவை அருணாசலப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, ஒறிசா, அசாம், கேரளம், மெகாலயா முதலாய மாநிலங்களில் உள்ளனவாம்.

### படமாளிகைகள்

இந்தியாவின் தென்பகுதியில் 6049 படமாளிகைகள் உண்டு என்று விஸ்டம் சஞ்சிகை கூறுகிறது. இவை ஆந்திரா, கர்நாடகம். கேரளம், தமிழ்நாடு ஆகிய நாற் பெரு மாநிலங்களில் உள்ளனவாம். இந்தியாவில் எல்லா மாக 11,239 படமாளிகைகள் என்றால் வடக்கிலும் பார்க்க தென் திசை உயரமாகிறது.

### புலன் வசதி குறைந்த தொழிலாளர்

சீன தேசத்தில் சங்காய் நகரிலுள்ள பைசிக்கிள் தொழிற்சாலையில் வேலை செய்யும் 500 தொழிலாளர் களுள் 60 வீதத்தினர் காதுகேளாதவரும் கண் தெரி யாதவருமாவர். இது மனிதாபிமானத்தில் மாண்புள்ள சாதனை.

### தேனீ

பெருந்தன்மை வாய்ந்த சிறிய பூச்சியாகிய தேனீ யிடம் நாங்கள் படிப்பதற்கு அதிகமுண்டு. கடமை யுணர்ச்சி, சோம்பலின்மை, சுயநலமின்மை, கூட்டுவாழ் வில் விசுவாசம், கூட்டைப் பாதுகாப்பதில் வீரவுணர்ச்சி, தூய்மையான வாழ்வு, மலர்ந்த பூக்கள் மடியாமல் மகரந்தச் சேர்க்கை செய்தல், பூக்களில் ஊறுவிளைவிக் காமல் தேன் சேகரித்தல், மனிதவினம் வாழ அமுதத்தை உபகரித்தல் என்பனவும் பிறவுமாம்.

### இசை ஒலிக்கும் மணல்

இசைக்கும் இந்திய பூமிக்கும் ஒரு தொடர்புண்டு. அங்கே கற்றூண் ஏழிசை யொலிப்பது சக்சம். கேரள மாநிலத்துக் கடற்கரையில் அலிப்பியை அடுத்த கரை யோரமணலில் கால்பட்டதும் இசையொலிக்கிறதாம்.

### பச்சைத் தேயிலை

நாங்கள் பயன் செய்யும் தேயிலை பதப்படுத்திய வரண்ட தேயிலையாகும். இரண்டு இலைகளும் குருத்து மாகக் கொய்யப்பட்ட பசிய தேயிலையைப் பானஞ் செய்து காலை, மாலை பருகினால் இருதய நோய்குணமா கிறதாம்.

## சங்கராசாரியர் சொன்ன விடைகள்

1. மிகக் கொடிய எதிரி என்பது? ஆசை
2. உயிர்க் காற்றிலும் அருமையானது? உரியதருமம்
3. காப்பாற்ற வேண்டியது ஒன்று? புகழ்
4. தேடற்கரிய தேட்டம்? பக்தி
5. மிகப் பெரிய பழி? அடாத்து
6. பெரியகாரியம் சித்தியடைவது? தபசினால்
7. உண்மைக் கல்வி என்பது? பெரியவரைப்பணிதல்
8. தெய்வம் என்பது? ஒருவர் செய்யும் நல்வினை
9. பயன் தரும் செயல் செய்பவர்? நம்பிக்கையும் ஒழுக்கமும் உள்ளவர்
10. வணக்கத்துக் குரியவர்? படித்து அடங்கியவர்
11. குடியைக் கெடுக்கும் செயல்? சாதுக்களைத் துன் புறுத்துதல்
12. சகலவேதங்களின் மூலம் என்பது? பிரணவம்

## சாணக்கியன் நீதி

13. சோம்பேறியின் செல்வம் பெருகுவதில்லை.
14. நிலையில்லாதவனுக்கு இம்மைப் பயனும்மில்லை மறு மைப் பயனும் இல்லை.
15. கெட்டவர்களின் சகவாசம் கேடுவிளைவிக்கும்.
16. குடிகாரனிடம் பால்வாங்கிப் பருகினாலும் மரியாதை கெடும்.
17. விதைப்பின் பயன் வானத்தைப் பொறுத்தது.
18. கள்ளனிட மாயினும் ஔடதம் பெறலாம்.
19. பழிவாங்கும் மனப்பான்மை இல்லாதவன் மரியா தைக் குரியவன்.
20. துன்பம் வலியமனத்தை யுடையவனையும் வாட்டு கிறது.
21. வறியவர்கள் வாழ்ந்தும் வாழாதவரேயாவர்.
22. அழகில்லாதவனாயினும் செல்வன் அழகானவன் ஆகிறான்.
23. நஞ்சு என்றும் நஞ்சேதான்.
24. ஒற்றைச் சில்லில் வண்டி ஓடாது.

### ஆன்மிகப் புரட்சி

மனிதனின் ஆன்மிகப் புரட்சியே இப்போது மிகவும் அவசியமானது.

— இப்சன் —

★ தேவைகளைச் சுருக்குதல் வாழ்வின் சிறப்பு ★

## சைவப் பெரியார்
## பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை

தமிழ்நாட்டிலே சென்னை மாநகரிலே சைவசித்தாந்த மகாசமாஜத்திலே பெருந்தலைவர்களுள் ஒருவராயிருந்த மும்மொழிப் பேராசிரியர், முதுபெரும்புலவர், சைவப் பெரியார் பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை, வட மொழிப் பேராசிரியராயும் மதிப்புக்குரிய பதிவாளராயும் இருந்த வர்.

நாமெல்லோமும் வடநாடு சென்று இமயமலை அடிவாரம்வரை கண்டுவந்தபோது, யாத்திரைக்கான ஒழுங்குகள் செய்ததோடு, மீண்டுவந்து சென்னையில் தங்கியபோது விருந்துதந்து வழியனுப்பியவர். தனிப் பட்ட முறையில் செய்த உதவிகளும் உண்டு. அவருடைய மகளாரை மணந்திருக்கும் நடேசன் அவர்கள் எம்மை வழியனுப்பியபோது விழிகளில் நீர் பெருக்கிய பாசத்தை மறக்க முடியாது. திருஞானசம்பந்தம்பிள்ளை அவர்களின் எச்சமாக வீரசைவம் முதலாய பெருநூல் களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் என்றும் நின்று நிலவும் தக்க தமிழன் ஒருவனை நாமும் இழந்து வருந்துகிறோம். அவரும் ஆடல் வல்லானின் அற்புதத்திருவடியில் சாந்தி பெற வணங்கி நிற்கிறோம்.

## மரம் தரும் பெரும் பயன்

பிறவியில் வரும் பிறப்பு, இறப்பு நிகழ்வுகளில் மரம் தரும் பெரும்பயன் பற்றிப் பேசியவாறு கோப்பாய் சமாதான நீதவான் எம். கே. இளையப்பு அவர்களின் இல்லத்தில் இல்லக்கிழத்தி இராசேசுவரி அவர்களின் அந்தியேட்டியின்போது மலர் வெளியீட்டில் பேசிய தோடு, பல பயன்தரு மரங்களை நாட்டியவாறு மில்க் வைற் தொழிலதிபர் வெளியீடுகளை வழங்கியும் மரக் கன்றுகள் வழங்கியும் உபகரித்தார்.

## அம்பாள் சனசமூக நிலையம்
## அருமையாகப் பாராட்டுகிறார்கள்

காரைநகர் கிழக்கு அம்பாள் சனசமூகநிலையத்தார் தேவையறிந்து தமக்கு உதவிகள் புரிந்த மில்க்வைற் தொழிலதிபரை நன்றியறிதலோடு நன்றாகப் பாராட்டு கிறார்கள்.

## மானிப்பாய் கண்ட வெள்ளிவிழா


மானிப்பாய் என்றுமே கலை நகராயிருந்து வந்துள்ளது. மானிப்பாயை மையமாகக் கொண்ட நவாலி, உடுவில், சுதுமலை, ஆனைக்கோட்டை முதலாய ஊர்கள் பலவித உபகரிப்புக்களைத் தந்துள்ளன. அங்கே உருவான இந்து மகளிர் கல்லூரி வெள்ளிவிழாக் கண்ட வைபவத்தைத் தொடர்ந்து அங்கே நிலவும் மறுமலர்ச்சி மன்றமும் இருபத்தைந்து ஆண்டு மகத்தான சேவை ஆண்டைக் காண்கிறது. மானிப்பாய் மக்கள் சேவையில் மதிப்புள்ள இடமாகியுள்ளது. வாழ்த்துகிறோம். ஞாபகார்த்தமாக மரம் வழங்கினார் மில்க்வைற் அதிபர்.

## திருநெல்வேலியிலேதான்

சேர் இராமநாதன் சிறப்பித்த திருநெல்வேலியில் பிறப்பித்த பரமேஸ்வராக் கல்லூரி இன்று பல்கலைக் கழக மாகப் பரிணமித்துள்ள வேளையில் பக்கத்துணையாகப் பல்லினப் பண்பாட்டு நிறுவனம் ஈவ்லின் இரத்தினம் அம்மையார் நினைவாக நிலவிப் பல்கலைகளுக்கு விளக்கம் செய்கிறது. பணி தொடரட்டும் பண்பாடு வளரட்டும்.


## யோகாசனம்

யோகாசனப் பயிற்சிமுறை நமது மாமுனி வர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இன் றைக்கு உலகிலுள்ள பிறமத மக்கள் இதன் பெருமையை உணர்ந்து அதைப் பயின்று வரு கிறார்கள். நம்முடைய சமயத்தில் தோன்றிய இவ்வரிய கலையின் பெருமையை நாமே இன் னும் சரிவர உணரவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இனியும் காலந் தாழ்த்தாது நமது இளந்தலைமுறையினருக்கு இக்கலையை, அவர்கள் பயிலும் கல்விக்கூடங் களிலும் பிற இடங்களிலும் கற்றுக் கொடுத்துப் பயன்பெறச் செய்யவேண்டும்.



25 மில்க்வைற் நீலசோப்

மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி

விளக்கப்படங்களுடன் கூடிய

யோகாசனப் படத்தையும்,

புத்தகத்தையும்

பெற்றுக்கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1 - 3 - 1989.